**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : CC –60/2025 (26/2022) |
| Deposition of witness for | Prosecution : LW 2 – PW 2 |
| | Defence : |
| | Court : |
| Name : சேகர் | Father's Name: கோபால் |
| | Husband Name: |
| Village/Town : சோ.நம்மியந்தல் | Taluk : |
| | Calling : விவசாயம் |
| | Age : 75 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27.05.2026

**1, 2 எதிரிகள் ஆஜர்.**

**சாட்சியின் அடையாளம் ஆதார்கார்டின் மூலம் உறுதிசெய்யப்பட்டது.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சோ.நம்மியந்தல் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அ.சா.1 எனது மகள் ஆவார். கடந்த 08 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் தேதி மாதம் நினைவில்லை. மாலை 04.00 மணியளவில் நானும் எனது மகள் ஜீவா மற்றும் எனது மனைவி விஜயாவும் ஆகியோருடன் எங்கள் நிலத்தில் இருந்த போது பக்கத்து நிலத்தில் சுமார் 10க்கும் மேற்பட்ட நபர்கள் கூட்டமாக நின்று சண்டைப்போட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது நானும், எனது மனைவயும், மகளும் சென்று பார்த்த போது கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் நான் கீழே விழுந்ததில் எனக்கு உடம்பில் அடிப்பட்டது. எனக்கும், எனது மகளுக்கும் கீழே விழுந்து அவருக்கு

தலையிலும் எனது மனைவி விஜயாவுக்கு உடம்பிலும் காயம் ஏற்பட்டது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அவ்வாறு அனுமதிக்கப்பட்டு அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை)**

கடந்த 23.07.2018ம் தேதியன்று மாலை 04.00 மணியளவில் ஆஜர் 1ம் எதிரி அவருடைய மூன்று மாடுகளை எங்கள் நிலத்தில் உள்ள பூச்செடியின் மீது ஓட்டிச்சென்றதாகவும், அதைப்பார்த்த நானும் எனது மனைவியும் ஆஜர் 1ம் எதிரியிடம் பூச்செடியின் மீது ஏன் மாடுகளை ஓட்டிச்செல்கிறாய் என்று கேட்டபோது அதற்கு ஆஜர் 1ம் எதிரி என்னை பார்த்து தேவிடியா பையா அப்படித்தான்டா பேசுவேன், உன்னால் என்ன செய்யமுடியும் என்று அசிங்கமாக திட்டிவிட்டு மாடுகளை நிலத்தில் கட்டிவிட்டு ஆஜர் 2ம் எதிரியுடன் வந்து என்னை இருவரும் கையாலும், காலாலும் அடித்து உதைத்து கீழே தள்ளியதாகவும், அதைத்தடுத்த எனது மனைவி விஜயாவையும் ஆஜர் எதிரிகள் கையாலும், காலாலும் அடித்து உதைத்தாகவும், இதை தடுத்த எனது மகளை ஆஜர் 1ம் எதிரி கொடுவாளை எடுத்து என்னை வெட்டும் போது அந்த வெட்டு என் மகளின் தலையில் விழுந்து ரத்தக்காயம் ஏற்பட்டதாகவும், நான் சத்தம் போடவே அங்கிருந்த செல்வம், குமாரி, வெண்ணிலா ஆகியோர் வந்து சண்டையை விலக்கிவிட்டதாகவும், அப்போது ஆஜர் 1ம் எதிரி கையில் வைத்திருந்த கொடுவாளைக் காட்டி இனிமேல் எங்ககிட்ட வைத்துக்கொண்டால் இந்த கொடுவாளால் வெட்டி இந்த நிலத்திலேயே புதைத்து விடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவும், போலிசாரின் விசாரணையில் நடந்த உண்மை சம்பவங்களை கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டதால் நடந்த உண்மை

சம்பவங்களை மறைத்து ஆஜர் எதிரிகளை வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd- (M.C. Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்

**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

Calender
Deposition of witness for

Case No. : CC –60/2025 (26/2022)
Prosecution : LW 3 – PW 3
Defence :
Court :

Name : விஜயா
Father's Name:
Husband Name: சேகர்
Village/Town : சோ.நம்மியந்தல்
Taluk :
Calling : விவசாயம்
Age : 56

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27.05.2026

**1, 2 எதிரிகள் ஆஜர்.**

**சாட்சியின் அடையாளம் ஆதார்கார்டின் மூலம் உறுதிசெய்யப்பட்டது.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சோ.நம்மியந்தல் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அ.சா.1 எனது மகள் ஆவார். அசா2 எனது கணவர் ஆவார். கடந்த 08 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் தேதி மாதம் நினைவில்லை. மாலை 04.00 மணியளவில் நானும் எனது மகள் ஜீவா மற்றும் எனது கணவர் சேகர் ஆகியோருடன் எங்கள் நிலத்தில் இருந்த போது பக்கத்து நிலத்தில் சுமார் 10க்கும் மேற்பட்ட நபர்கள் கூட்டமாக நின்று சண்டைப்போட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது எனது கணவரும், எனது மகளும் சென்று பார்த்த போது கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் என் கணவர் கீழே விழுந்ததில் அவருக்கு உடம்பில் அடிப்பட்டது. எனக்கும், என் கணவருக்கும், எனது

மகளுக்கும் கீழே விழுந்ததில் எனது மகளுக்கு தலையிலும் எனக்கு உடம்பிலும் காயம் ஏற்பட்டது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அவ்வாறு அனுமதிக்கப்பட்டு அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை)**

கடந்த 23.07.2018ம் தேதியன்று மாலை 04.00 மணியளவில் ஆஜர் 1ம் எதிரி அவருடைய மூன்று மாடுகளை எங்கள் நிலத்தில் உள்ள பூச்செடியின் மீது ஓட்டிச்சென்றதாகவும், அதைப்பார்த்த நானும் எனது கணவரும் ஆஜர் 1ம் எதிரியிடம் பூச்செடியின் மீது ஏன் மாடுகளை ஓட்டிச்செல்கிறாய் என்று கேட்டபோது அதற்கு ஆஜர் 1ம் எதிரி என் கணவரை பார்த்து தேவிடியா பையா அப்படித்தான்டா பேசுவேன், உன்னால் என்ன செய்யமுடியும் என்று அசிங்கமாக திட்டிவிட்டு மாடுகளை நிலத்தில் கட்டிவிட்டு ஆஜர் 2ம் எதிரியுடன் வந்து என் கணவரை இருவரும் கையாலும், காலாலும் அடித்து உதைத்து கீழே தள்ளியதாகவும், அதைத்தடுத்த என்னை ஆஜர் எதிரிகள் கையாலும், காலாலும் அடித்து உதைத்தாகவும், இதை தடுத்த எனது மகளை ஆஜர் 1ம் எதிரி கொடுவாளை எடுத்து என் கணவரை வெட்டும் போது அந்த வெட்டு என் மகளின் தலையில் விழுந்து ரத்தக்காயம் ஏற்பட்டதாகவும், என் மகள் சத்தம் போடவே அங்கிருந்த செல்வம், குமாரி, வெண்ணிலா ஆகியோர் வந்து சண்டையை விலக்கிவிட்டதாகவும், அப்போது ஆஜர் 1ம் எதிரி கையில் வைத்திருந்த கொடுவாளைக் காட்டி இனிமேல் எங்ககிட்ட வைத்துக்கொண்டால் இந்த கொடுவாளால் வெட்டி இந்த நிலத்திலேயே புதைத்து விடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவும், போலிசாரின் விசாரணையில் நடந்த உண்மை சம்பவங்களை கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டதால் நடந்த உண்மை

சம்பவங்களை மறைத்து ஆஜர் எதிரிகளை வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்ட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd- (M.C. Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்

**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,
KILPENNATHUR.

| | | | |
|---|---|---|---|
| Calender | | Case No. | : CC –60/2025 (26/2022) |
| Deposition of witness for | | Prosecution | : LW 8 – PW 4 |
| | | Defence | : |
| | | Court | : |
| Name | : பவுன்குமார் | Father's Name: | சிவபிரகாசம் |
| | | Husband Name: | |
| Village/Town | : சோ.நம்மியந்தல் | Taluk | : |
| | | Calling | : விவசாயம் |
| | | Age | : 26 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27.05.2026

**1, 2 எதிரிகள் ஆஜர்.**

**சாட்சியின் அடையாளம் ஆதார்கார்டின் மூலம் உறுதிசெய்யப்பட்டது.**

**<u>முதல் விசாரணை</u> :**

நான் தற்போது சோ.நம்மியந்தல் கிராமத்தில் வசித்து பூ அறுவடை செய்து பூ வியாபாரம் செய்து வருகிறேன். சாட்சி 7 பச்சையப்பன் என்பவரை தெரியும் தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அது **அசாஆ2** ஆகும். கடந்த 2018ம் ஆண்டு ஒருநாள் தேதி, மாதம் நினைவில்லை பகல் 11 மணியளவில் நான் கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தில் ஒரு வேலையாக சென்றிருந்தபோது போலிசார் என்னிடம் வெள்ளைதாளில் கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். எந்த வழக்கிற்காக நான் கையொப்பம் செய்தேன் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அவ்வாறு அனுமதிக்கப்பட்டு அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை)**

கடந்த 01.08.2018ம் தேதி அன்று காலை 7 மணியளவில் நானும் எனது தாத்தா பச்சையப்பனும் எங்கள் ஊர் சேகர் நிலத்திடம் இருந்தபோது அங்கு வந்த கீழ்பென்னாத்தூர் காவல் நிலைய போலிசார் சண்டை வழக்கு சம்மந்தமாக எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் அதில் நானும் எனது தாத்தா பச்சையப்பனும் கையொப்பம் செய்ததாகவும் போலிசார் விசாரணையில் நடந்த சம்பவங்களை கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளை இவ்வழக்கில் காப்பாற்ற வேண்டி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd- (M.C. Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்

**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,

KILPENNATHUR.

| | | | |
|---|---|---|---|
| Calender | | Case No. | : CC –60/2025 (26/2022) |
| Deposition of witness for | | Prosecution | : LW 1 – PW 1 |
| | | Defence | : |
| | | Court | : |
| Name | : ஜீவா | Father's Name: | |
| | | Husband Name: | சேகர் |
| Village/Town | : குன்னியந்தல் | Taluk | : |
| | | Calling | : விவசாயம் |
| | | Age | : 35 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27.05.2026

**1, 2 எதிரிகள் ஆஜர்.**

**சாட்சியின் அடையாளம் கீழ்பென்னாத்தூர் காவல் நிலைய தலைமை காவலர் திரு.விஜயகுமார் என்பவர் மூலம் உறுதிசெய்யப்பட்டது.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது குன்னியந்தல் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். கடந்த 08 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் தேதி மாதம் நினைவில்லை. மாலை 04.30 மணியளவில் நானும் எனது அப்பா சேகரும், எனது அம்மா விஜயாவும் எங்கள் நிலத்தில் இருந்த போது பக்கத்து நிலத்தில் சுமார் 10க்கும் மேற்பட்ட நபர்கள் கூட்டாமாக நின்று சண்டைப்போட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது நானும், எனது அம்மாவும், அப்பாவும் சென்று பார்த்த போது கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் நான் கீழே விழுந்ததில் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. அப்பாவும், அம்மாவும் கீழே விழுந்து அவர்களுக்கு காயம்

ஏற்பட்டது. கூட்டத்தில் இருந்த அடையாளம் தெரியாத நபர்கள் எனது அப்பாவையும், அம்மாவையும் கையால் தாக்கினார்கள். ஆஜர் எதிரிகளுக்கும் எங்களுக்கும் ஏற்கனவே இருந்த நிலப்பிரச்சனை காரணமாக சந்தேகத்தின் பேரில் எதிரிகளின் மீது புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அவ்வாறு அனுமதிக்கப்பட்டு அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை)**

கடந்த 23.07.2018ம் தேதியன்று மாலை 04.00 மணியளவில் ஆஜர் 1ம் எதிரி அவருடைய மூன்று மாடுகளை எங்கள் நிலத்தில் உள்ள பூச்செடியின் மீது ஓட்டிச்சென்றதாகவும், அதைப்பார்த்த எனது அப்பாவும், அம்மாவும் ஆஜர் 1ம் எதிரியிடம் பூச்செடியின் மீது ஏன் மாடுகளை ஓட்டிச்செல்கிறாய் என்று கேட்டபோது அதற்கு ஆஜர் 1ம் எதிரி எனது அப்பாவைப் பார்த்து தேவிடியா பையா அப்படித்தான்டா போவேன், உன்னால் என்ன செய்யமுடியும் என்று அசிங்கமாக திட்டிவிட்டு மாடுகளை நிலத்தில் கட்டிவிட்டு ஆஜர் 2ம் எதிரியுடன் வந்து எனது அப்பாவை இருவரும் கையாலும், காலாலும் அடித்து உதைத்து கீழே தள்ளியதாகவும், அதைத்தடுத்த எனது அம்மா விஜயாவையும் ஆஜர் எதிரிகள் கையாலும், காலாலும் அடித்து உதைத்தாகவும், இதை தடுத்த என்னை ஆஜர் 1ம் எதிரி கொடுவாளை எடுத்து எனது அப்பாவை வெட்டும் போது அந்த வெட்டு என் தலையில் விழுந்து ரத்தக்காயம் ஏற்பட்டதாகவும், நான் சத்தம் போடவே அங்கிருந்த செல்வம், குமாரி, வெண்ணிலா

ஆகியோர் வந்து சண்டையை விலக்கிவிட்டதாகவும், அப்போது ஆஜர் 1ம் எதிரி கையில் வைத்திருந்த கொடுவாளைக் காட்டி இனிமேல் எங்ககிட்ட வைத்துக்கொண்டால் இந்த கொடுவாளால் வெட்டி இந்த நிலத்திலேயே புதைத்து விடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவும், புகார் வாக்குமூலத்திலும் போலிசாரின் விசாரணையிலும் நடந்த உண்மை சம்பவங்களை கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டதால் நடந்த உண்மை சம்பவங்களை மறைத்து ஆஜர் எதிரிகளை வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd- (M.C. Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்

**(அரசுத்தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அவ்வாறு அனுமதிக்கப்பட்டு அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை)**